தி.மு.கழகம் இருக்கும் வரை

தற்குறிகளின் அடிமைச் சாசன நாடகம் இங்கே அரங்கேற முடியாது!

பக்காவாக திட்டமிடப்பட்டு... ஆனால் கொஞ்சம் பக்கோடா திட்டமாக மாறிக்கொண்டிருக்கும் ஒரு கோல்ட் ப்ளட்டட் மர்டர்ருக்கு இணையான அல்ல... அதைவிட கொடூரமான சம்பவம் தான் இது..!

ஒரு நாலு நாள் தொடர் விடுமுறை கிடைத்தால், தமிழ்நாட்டின் அப்பர் கிளாஸ் துவங்கி... அது கொஞ்சம் கொஞ்சமாக அப்பர் மிடில் கிளாஸில் பயணித்து... அதுவே மெல்ல மெல்ல பயணித்து மிடில் கிளாஸ், லோயர் மிடில் கிளாஸ் வரை வந்து நிற்கும் சுற்றுலா தளங்களின் பட்டியில் இன்றைக்கு முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது கோவையின் ஈஷா யோகா மையம் என்றால் யாராவது மறுப்பீர்களா..?!

அப்படி இல்லை என்றால் தொடர்ந்து இந்தக் கட்டுரையின் ஊடே என்னோடு பயணியுங்கள்.

அப்படி அந்த ஈஷா யோகா மையம், அதைக் காணச் செல்லும் குடும்பங்களின் தலைவர் தலைவிக்கோ அந்தக் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர், இளம் பெண்களுக்கோ அல்லது மாணவ, மாணவிகளுக்கோ எதைக் கொடுக்கின்றது?

நல்ல வைப் கிடைக்கிறது என்பார்கள். மூட நம்பிக்கைகளின் அடுத்த பரிணாமம் அங்கே விதைக்கப்படுகிறது. அங்கே தயாரிக்கப்படும் நிறைய பொருட்கள் ஆன்மீக சாயங்களுடன் அந்த அப்பாவி மக்களின் தலையில் கட்டப்படுகின்றது. தொடர்ந்து வந்தால் வாழ்க்கையில் உச்சம் பெறலாம் என்ற போலி நம்பிக்கைகள் திணிக்கப்படுகின்றன.

சில பல ஆயிரம் கோடிகள் அங்கே கொட்டோ கொட்டென்று கொட்டப்படுகின்றது. அவை அனைத்துமே இப்படியான சாமான்ய பொது மக்களிடம் இருந்து அங்கே செல்வதற்காக அவர்கள் செல வழிக்கும் சில நூறுகளில் அல்லது ஆயிரங்களில் துவங்கி லட்சக் கணக்கில் வசூலிக்கப்பட்டது தான்.

ஆனால் அந்த செலவுகளுக்கான உண்மையான அல்லது முழு மையான பலன்கள் அந்த அப்பாவி மக்களுக்குக் கிடைத்ததா என் றால் சிம்ப்ளி நோ என்பது தான் பதில். அதையும் மீறி சிலர் அங்கே சென்று வந்த பிறகு தான் தனக்கு நல்ல வளர்ச்சி கிடைத்தது, மனத் தெளிவு கிடைத்தது, வேலை கிடைத்தது, திருமணம் நடந்தது, கடன் நீங்கியது, ஆரோக்கியம் கிடைத்தது என்று சொல்வார்களேயாயின், அது அவர் முட்டாள்தனமாக பணத்தை செலவழித்ததாக குற்றம் சாட்டும் தன்னுடைய உள்ளுணர்வுக்கு சொல்லும் சமாதானமாகவே கருதப்பட வேண்டும்!

இந்த நிலையில் தான், கொங்கு மண்டலம் என்றாலே, உழைப் பாளர்களின் உலகம். கோவை என்றாலே தென் இந்தியாவின் மான் செஸ்டர், ஜி.டி.நாயுடுவின் அபூர்வமான கண்டுபிடிப்புகள், தொழில் நுட்பங்கள், தொழில் யுக்திகள். நல்ல பண வளம் கொழிக்கும் பகுதி என்கிற அடையாளங் களை எல்லாம் கடந்து.

கோவை என்றாலே ஈஷா மையம் தான் அடையாளமாக மாறிக் கொண்டிருந்த இந்த நிலையில் தான்.

இல்லை இல்லை கோவை ஒரு அறிவு சார் பகுதி. அங்கே இருப்பவர்கள் தங்கள் பொது அறிவையும், உலக அறிவையும், தொழில் நுட்பங்களின் புதிய வரவுகளையும், மேற்படிப்பு களுக்கான போட்டித் தேர்வுகளையும். இப்படி யாக அனைத்து தளங்களிலும் அவர்கள் தங் களை மேம்படுத்திக் கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும். கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் தொழில் என்று அனைத்திலும் தங்களை வளர்த்துக்கொள்ள ஏதுவாக அங்கே அமைக்கப் பட்டது தான் பெரியார் அறிவுலகம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவரது ஆட்சிக் காலத்தில் சென்னையில் கட்டிய ஆசியாவிலேயே மிகச் சிறந்த அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் போன்று தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக பல்வேறு முக்கிய மாநகரங்களிலும் உரு வாக்கி, அந்தந்த பகுதி மக்கள். குறிப்பாக இளைஞர்கள், மாணவர் கள் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே கடந்த திமுக ஆட்சியில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் முன்னூறு கோடிக்கும் மேலான செலவில் பிரம்மாண்டமாக உருவாக் கப்பட்டது தான் இந்த பெரியார் அறிவுலகம்.

ஏற்கனவே மதுரையில் துவங்கப்பட்ட இந்த மாதிரியான நூலகம், அடுத்தடுத்த கட்டங்களாக திருச்சி, நெல்லை என்று கடந்த திமுக ஆட்சியிலேயே திட்டமிடப்பட்டு, பணம் ஒதுக்கீடு செய்து அதற்கான வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில் தி.மு.க. ஆட்சி போய், த.வெ.க. ஆட்சி வருகின்றது. முழுமையாக கட்டி முடிக்கப்பட்டிருந்த, கோவை பெரியார் அறிவுலகத்தை, ஐந்தரை மாதங்கள் கழித்து நடிகர் விஜய் திறந்து வைக்கின்றார். காரணம் அவர் தான் இன்றைக்கு முதலமைச்சர்.

ஆனால் பெரியார் அறிவுலக திறப்புவிழா என்பது அதற்குறிய பிரம்மாண்டத்துடன், அதாவது அங்கே ஒரு ஈஷா மையம் எந்த அள விற்கான விளம்பரங்களோடு செயல்படுகின்றதோ, அதற்கு சற்றும் குறைவில்லாத வகையில்... பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களை வரவழைத்து கோவை மண்டல இளைஞர்களே, இளம் பெண்களே, மாணவ மாணவிகளே வாருங்கள், வந்து இந்த அறிவுலகைப் பாருங் கள், அறிவியல் பூர்வமாக உங்கள் ஐக்யூவை வளர்த்துக்கொள்ளுங் கள், உயர்நிலை போட்டித் தேர்வுக்கு இங்கே வந்து படியுங்கள், கருத் தரங்கங்களை நிகழ்த்துங்கள் இப்படியாக விளம்பரம் செய்து அவர்களை ஈர்க்கும் வகையில் அல்லவா அந்த திறப்பு விழா நடந் திருக்க வேண்டும்?

ஆனால் அந்த திறப்பு விழாவில் விளம்பரப்படுத்தப்பட்டது என்ன தெரியுமா? அந்த திறப்பு விழாவை விரைவாக முடித்துக் கொண்டு, அங்கிருந்து கேரளாவில் இருக்கும் ஒரு பெரிய நகைக்கடை வியா பாரியின் வீட்டு நிகழ்ச்சிக்காக நடிகர் விஜய் செல்வதற்கு அந்த நகைக்கடை வியாபாரியால் நிறுத்தப்பட்டிருக்கும் காஸ்ட்லியான ஹெலிகாப்டரும் அன்றைக்கு பெய்த மழையில் நனைந்தவாறே சில பெண்கள் நடிகர் விஜய்யைப் பார்ப்பதற்காக பேரிகேட்டுக்கு பின்பாக நின்று ஆடிப்பாடும் கூத்துக்களும் தான் பெரியார் அறிவுலக திறப்பு விழாவின் ஆகச் சிறந்த நிகழ்வுகளாக விளம்பரப் படுத்தப்பட்டன.

நெஞ்சு பதறுமா இல்லையா அதைக் கட்டி முடித்தவருக்கு? நல்ல தோர் வீணை செய்தே, அதை நலங்கெடப் புழுதியில் வீசிக் கொண் டிருக்கின்றானே இந்த அறிவு கெட்ட ஆட்சியாளன் என்ற கோபமும், ஆற்றாமையும் வரும் தானே, இளைஞர்களின் நலனுக்காகவே அதைத் திட்டமிட்டு கட்டிக் கொடுத்த அந்த முன்னாள் ஆட்சியாள ருக்கு?

ஆம் அவருக்கு மேற்சொன்ன அந்த கந்தாயங்கள் எல்லாம் மன திற்குள் வந்தது தான். ஆனால் அதற்காகவெல்லாம் அவர் இது விதி என்று தலையில் கை வைத்துக் கொண்டு முடங்கி விடாமல், கோவைக்குச் செல்கிறார். அவரால் அதை மீண்டும் திறந்து வைக்க முடியாது தான். ஆனாலும் அதை பிரகடனப்படுத்துகிறார். அதைப் பார் வையிடுகிறார். அதை பேசுபொருளாக்குகிறார். அங்கே என்னவெல் லாம் இருக்கின்றது. யார் யாருக்கெல்லாம் அதனால் பயன் கிடைக் கப் போகின்றது என்று தங்கள் இயக்கத் தொண்டர்கள் மூலம் பரப்புரை செய்கிறார்.



அறிவுத்தேடலில் இருக்கும், முன்னேறத்துடிக்கும் இளைஞர்களும், பொது மக்களும் அதைக் காண அணிதிரண்டு வருகின்றனர்.

விடுவார்களா அறிவுக் கெடுதிகள்? தாங்கிக் கொள்வார்களா மூட நம்பிக்கை வியாபாரிகள்?

பெரியார்_அறிவுலகம் கோவையின் அடையாளமாக மாறிப் போனால் ஈஷாவின் வருமானம் குறையுமே. மக்கள் அறிவுத்தெளிவு கொண்டுவிட்டால், மதத்தின் பெயரில், ஆன்மீகத்தின் பெயரில் கல்லா கட்டுவது தடைபடுமே?

அவர்கள் வீழ்வதற்கான மூடநம்பிக்கையை காசுகொடுத்து வாங் கிக் கொண்டிருந்தார்கள். அறிவை இலவசமாகவே தருகின்றோம் வாருங்கள் என்று அழைத்தால். கொஞ்சம் கொஞ்சமாக ஒரு கட்டத் தில் எல்லோருமே அங்கு சென்று விடுவார்களே?

அதனால் தான் பெரியார் அறிவுலகம் பற்றிய பேசு பொருள் இளைஞர் மத்தியில் முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களால் உருவாக்கப்பட்ட ஒரு சில தினங்களில்

இந்த கட்டுரையின் முதல் பத்தியில் சொன்ன அந்த பக்கோடா திட்டம் உருவாக்கப்படுகிறது. யாரால்? யாராலோ! அதை வாசகர் களின் முடிவுக்கே விட்டுவிடுகின்றேன். அவர்கள் முடிவெடுக்க தேவையான தரவுகள் சிலவற்றையும் இங்கே தருகிறேன்.

இந்த பெரியார் அறிவுலக சர்ச்சை யாரால் எழுப்பப்படுகிறது, எங்கே எழுப்பப்படுகிறது?

பெருமாள் முருகனால் எழுப்பப்படுகிறது. அவர் எந்தப் பின்னணி யில் இருப்பவர்? காலச்சுவடு பதிப்பகத்தின் பின்னணியில் இருப் பவர். காலச்சுவட்டின் எஸ்டிடி என்ன? ஈழப் பிரச்சினையில் திமுகவை. விட்டுவிடுவோம், வாசகர்களுக்குப் புரிந்திருக்கும். இத்தனைக் கும் இந்த பெருமாள் முருகன் அந்த நூலகத் திற்கு நூல்கள் வாங்கும் குழுவில் இடம்பெற் றிருந்த முக்கிய உறுப்பினர். அங்கே தவறான புத்தகங்கள் வாங்க முடிவு செய்திருந்தால் அப்பொழுதே அப்ஜெக்ஷன் தெரிவித்திருக்க லாமே?



சௌமியன் வைத்தியநாதன்
கழக இலக்கிய அணி
துணைச் செயலாளர்

ஏன் ஏழெட்டு மாதம் கழித்து நடிகர் விஜய் திறந்த பொழுது சும்மா இருந்தவர், முன்னாள் முதலமைச்சர் அங்கு வந்து சென்று பேசு பொருளானபிறகு ஏன் இந்தப் பிரச்சினையை கிளப்புகிறார்?

ஓகே, அடுத்து அவர் அந்த சர்ச்சைக்குறிய கட்டுரையை எங்கே. அதாவது எந்த மீடியா வில் எழுதுகிறார்? 'சிந்தை' இணையதளத் தில். அது யாருடையது? சமஸ் உடையது. சமஸ் எங்கே வேலை செய்கிறார்? புதியதலைமுறையில். புதிய தலைமுறை திமுகவுக்கு ஆதரவா எதிர்ப்பா? அதன் ஓனர் பச்சை திமுக எதிர்ப்பாளர் என்று தமிழ்நாட்டின் பச்சைக் குழந்தைக்குக் கூட தெரியும்.

ஆனாலும் அந்த சமஸ் நடுநிலையாளரா? நிச்சயமாக இல்லை. அவர் ஆகச் சிறந்த திமுக எதிர்ப்பாளர். இதுவும் ஊரறிந்த ரகசியம்.

இந்த சர்ச்சையில், திமுக தன் மீது தவறில்லை என்பதற்கு ஏகப்பட்ட ஆதாரங்களை அடுக்கிக் கொண்டே இருக்கின்றார்கள். அந்த புத்தகங் களின் ஆசிரியர்கள் பெயரையெல்லாம் திமுகவின் கடைகோடி தொண் டன் கூட ஏற்கமாட்டான். உச்சக்கட்டமாக, லஞ்ச ஒழிப்புத் துறையில் திமுகவே இது பற்றி விசாரிக்க கோரிக்கை வைத்துள்ளது.

இதில் என்னுடைய கருத்து என்னவென்றால் நடப்பது தவெக ஆட்சி, தி.மு.க. ஆட்சியில் தான் இந்த தவறு நடந்தது என்றால், இது ஒரு லட்டு மாதிரியான விஷயம் தவெகவுக்கு. லஞ்ச ஒழிப்புத்துறை, சி.பி.சி.ஐ.டி., சி.பி.ஐ., ஐ.பி., ரா.போன்றெல்லாம் இதை விசாரித்துத்தான் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற தேவையே இல்லை.

ஜஸ்ட் துறை ரீதியான விசாரணையை மேற்கொண்டாலே போதும். இதில் குற்றவாளி யார் என்பதை சொடுக்குப் போடும் நேரத் தில் கண்டுபிடித்து உள்ளே தள்ளிவிடலாம். ஆனால் ஏன் அதைச் செய்ய தவெக அரசு தடுமாறுகிறது..?!

இது எங்கள் சிக்னேசர் பிராஜெக்ட். இது எங்கள் பெருமை என்று மார்தட்டிக்கொள்ளும் திமுக மற்றும் அதன் தலைவர், சில பல லட்சம் லஞ்சப்பணத்திற்காக தங்கள் பெருமையைக் கெடுத்துக்கொள்வார் களே என்ற கேள்வியோடு நூலகங்களை யார் மூடுவார்கள் என்ற கேள்வியையும் எழுப்ப விரும்புகிறேன்.

இதே போன்று தான் சென்னையில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் திறந்த பிறகு, அ.தி.மு.க. ஜெயலலிதா ஆட்சி அமைந்தது. அப்பொழுது இந்தியா வந்த அமெரிக்க முன்னாள் அதிப ரின் மனைவி அதை பார்வையிட வந்தார். புரோட்டகால் படி அன்றைய முதல்வராக இருந்த ஜெயலலிதாவும் அங்கே செல்ல வேண்டியிருந்தது.

அதில் கலைஞருக்கு கிடைத்த புகழைக் கண்டு பொறுக்க மாட்டா மல், அந்த பிரம்மாண்ட நூலகத்தை சேட்டு வீட்டு திருமணத்திற்கு வாடைக்கு விட்டு அதை அடியோடு அழிக்க நினைத்தவர் தான் ஜெயலலிதா. ஆனால் வழக்குத் தொடர்ந்து அந்த நூலகத்தை மீட்டது தி.மு.க.

இது வரலாறு, வரலாறு மீண்டும் திரும்புகிறது. அவ்வளவு தான்.

ஆனால் வரலாறு இன்னொன்றையும் பதிவு செய்திருக்கின்றது. அதாவது கலைஞருக்குப் புகழ் சேர்க்கக் கூடிய அண்ணா நூற் றாண்டு நினைவு நூலகம், புதிய தலைமைச் செயலகம், சமச்சீர் கல்வி போன்றவற்றை அழிக்க நினைத்த ஜெயலலிதா ஊழல் குற்றவாளியாகத் தான் இறந்து போனார் என்பது தான் அது!

இனி அவர்கள் அஜெண்டா என்பது திமுக நூலகங்கள் கட்டியதே ஊழல் செய்யத்தான். நூலகங்கள் என்றாலே ஊழல். நூலகங்கள் பல நூறு கோடிகளில் தேவையா?

இப்படியான கேள்விகளை மக்கள் மத்தியில் படிப்படியாக எழுப்பிக்கொண்டே வந்து. கட்டிய நூலகங்களை வேறு செயல்பாடு களுக்கு மாற்றவும், கட்டிக் கொண்டிருக்கும் நூலகங்களை தடுத்து நிறுத்தவும். எல்லோருக்கும் கல்வி, அறிவு என்பதை விரும்பாத கூட்டத்தின் அடிமையாக இருக்கும் இந்த நடிகர் விஜய்யின் த.வெ.க. அரசு முயற்சிகளை முன்னெடுக்கும்!

ஆனால் தி.மு.க. இருக்கும் வரை இந்த தற்குறிகளின் அடிமை சாசன நாடகம் இங்கே அரங்கேற முடியாது என்பது தான் உண்மை..!

பல குற்றச் சம்பவங்களை மூடி மறைக்கவே த.வெ.க. அரசு முயல்கிறது!

சட்டம் - ஒழுங்கைச் சரி செய்து குற்றங்களைத் தடுக்க விஜய் அரசு முயல வேண்டும்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, நவ. 13 -

பல குற்றச் சம்பவங் களை மூடி மறைக்கவே த.வெ.க. அரசு முயல்கிறது எனவும் இனியாவது சட் டம் - ஒழுங்கு சீர்குலைவை சரி செய்து குற்றங்களைத் தடுக்க விஜய் அரசு முயல வேண்டும் எனவும் 'தின கரன்' நாளேடு 11.11.2026 தேதிய நாளிதழில் 'பெரு கும் குற்றங்கள்' எனும் தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து 'தினகரன்' நாளேடு வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு:-

தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்த பின்பு சட் டம், ஒழுங்கு சீர்குலைந்து கொலை, கொள்ளை சம்ப வங்கள் அன்றாடம் நடக் கும் நிகழ்வாகவே மாறி விட்டன. கடந்த மாதம் 26ம் தேதி தேனி மாவட் டம், தேக்கம்பட்டி சிறை யில் இருந்து இரவு, போலீ சாரை கொடூரமாகத் தாக்கி விட்டு, 17 கைதிகள் தப்பிச் சென்ற விவகாரம் தமிழகத்தில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியது. இச்சம்பவம் சட்டம், ஒழுங்கில் நம் மாநிலம் எவ் வளவு பின்னடைவை சந் தித்திருக்கிறது என்பதற்கு சாட்சியமாகவே அமைந்து விட்டது

மேலும், விசாரணை கைதிகள் மரணம், சிறைக் குள் கைதிகள் தற்கொலை என பல சம்பவங்கள் தொடர்கதையாக உள் ளன. கைதிகள் தப்பிய சம் பவம் நடந்து 2 வாரத்தில் தீபாவளி தினத்தன்று, சாலையில் மது போதை யில் ரகளை செய்தவர் களை தட்டிக் கேட்ட சிறப்பு எஸ்.ஐ. செந்தில்கு மார், கும்பலால் கொடூர மாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். தெருக்கள் எங்கும் பிரகாச மாகவும், வாண வேடிக் கையால் வானமே வண்ண மயமாகவும் திகழும் தீபாவளி பண்டிகை நாளில் மட்டும், 17 பேர் கொலையாகியுள்ளனர்.

இதில் 2 ரவுடிகள், சிறு வர்கள் உள்பட பலர் அடக் கம். குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் அடுத்த டுத்து சீரான இடைவெளி யில், பழிக்குப் பழியாக ரவு டிகள் கொல்லப்படும் சம்பவம், அம்மாவட்ட மக்களை அதிர்ச்சிக்குள் ளாக்கி வருகிறது. தமிழகத் தில் தீபாவளி தினத்தில் கூட கொலை சம்பவங்கள் அதிகரித்துள்ளதே என்ற கேள்விக்கு, அமைச்சர் ராஜ்மோகன் பண்டிகைக் காலங்களில் இது போன்ற கொலைச் சம்பவங்கள் நடப்பது புதிதல்ல;

கடந்த காலங்களிலும் தீபாவளி நாட்களில் இது போன்ற சம்பவங்கள் நடந் துள்ளன என கூலாக அளித்த பதில் கட்சித் தலை வர்களை கொந்தளிக்க வைத்துள்ளது. பண்டிகை தினத்தில் கொலையான வர்கள் குறித்த கேள்விக்கு, ஒரு அமைச்சர் இப்படியா பொறுப்பின்றி பதில் சொல்வது? இதிலுமா முந் தைய ஆட்சி மீது குற்றம் சுமத்த பார்ப்பது? இது வன்மையாகக் கண்டிக் கத்தக்கது.

சட்டம், ஒழுங்கு பிரச்சி னையை சமாளிக்க முடியா மல், உரிய பதில் தராமல் பொறுப்பை தட்டிக் கழிக் கும் செயலென, அமைச்சர் ராஜ்மோகனுக்கு பல்வேறு தரப்பிலும் எதிர்ப்புகள் கு விந்து வருகின்றன. மேலும், இன்ஸ்பெக்டர், எஸ்.ஐ. உள்ளிட்டோரை வெட்டிக் கொல்ல முயன்ற சம்பவமும் தொடர்கதை யாக உள்ளன. தமிழகத்தில் கடந்த 6 மாதத்தில் மட்டும் சுமார் 200க்கும் மேற்பட் டோர் கொலை செய்யப் பட்டுள்ளதாக வெளியா


தினகரன்
நவம்பர் 11, 2026 புதன்கிழமை
பெருகும் குற்றங்கள்
தமிழகத்தில் தவெக ஆட்சி அமைந்த பின்பு சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து கொலை, கொள்ளை சம்பவங்கள் அன்றாடம் நடக்கும் நிகழ்வாகவே மாறி விட்டன. கடந்த மாதம் 26ம் தேதி தேனி மாவட்டம், தேக்கம்பட்டி சிறையில் இருந்து இரவு, போலீசாரை கொடூரமாக தாக்கி விட்டு, 17 கைதிகள் தப்பிச் சென்ற விவகாரம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இச்சம்பவம் சட்டம், ஒழுங்கில் நம் மாநிலம் எவ்வளவு பின்னடைவை சந்தித்திருக்கிறது என்பதற்கு சாட்சியமாகவே அமைந்து விட்டது. மேலும், விசாரணை கைதிகள் மரணம், சிறைக்குள் கைதிகள் தற்கொலை என பல சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளன.
கைதிகள் தப்பிய சம்பவம் நடந்து 2 வாரத்தில் தீபாவளி தினத்தன்று, சாலையில் மது போதையில் ரகளை செய்தவர்களை தட்டிக் கேட்ட சிறப்பு எஸ்.ஐ. செந்தில்குமார், கும்பலால் கொடூரமாக தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். தெருக்கள் எங்கும் பிரகாசமாகவும், வான வேடிக்கையால் வானமே வண்ணமயமாகவும் திகழும் தீபாவளி பண்டிகை நாளில் மட்டும், 17 பேர் கொலையாகியுள்ளனர். இதில் 2 ரவுடிகள், சிறுவர்கள் உள்பட பலர் அடக்கம். குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்தில் அடுத்தடுத்து சீரான இடைவெளியில், பழிக்குப்பழியாக ரவுடிகள் கொலைசெய்யப்பட்டார். இச்சம்பவம், அம்மாவட்ட மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகிறது.

கும் தகவல்கள் அதிர்ச்சி அளிக்கின்றன.

பெரும்பலான சம்பவங் கள் மது, கஞ்சா மற்றும் உயர்ரக போதைப்பொ ருள் பயன்பாட்டினால், நடப்பதாகக் கூறப்படும் நிலையில், இவற்றை கட் டுப்படுத்த தமிழக அரசு முயல வேண்டும். உச்சக் கட்டமாக, சிவகங்கை மாவட்டம், இளையான்கு டியில் மெத்தப்பட்ட மைன் போதைப்பொருள் தயாரிக்கப்பட்டது பேர திர்ச்சியை உருவாக்கியது.

உச்சக்கட்டமாக த.வெ.க. அரசின் துணை சபாநாயகர் ரவிசங்கர், அடிப்படை வசதிகள் கோரியவரை தாக்கும் வீடியோ, கலெக்டருக்கு, த.வெ.க. எம்.எல்.ஏ. ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பிய விவகாரம், கொலை மிரட்டல் விடுப் பது, போதைப்பொருள் வழக்கில் சிக்குவது, பாலி யல் வழக்கில் சிக்குவது, கவுன்சிலர், கட்சிப்பதவி களுக்கு பல லட்சம் கேட் பது என அக்கட்சியினரே பல சர்ச்சைகளில் சிக்கி வருகின்றனர்.

மேலும், பல குற்றச் சம் பவங்களில் பிரச்சினை களை மூடி மறைக்கவே த.வெ.க. அரசு முயல்கிறது. இனியாவது, குற்ற சம்ப வங்களை தீவிரமாக தடுக்க த.வெ.க. அரசு முயல வேண்டும். காவலர் ரோந்தை தீவிரப்படுத்த வேண்டும். சட்டம், ஒழுங்கு சீர்குலைவை சரி செய்வது தொடர்பாக காவல்துறை உயரதிகாரி களுடன் முதல்வர் விஜய், அவ்வப்போது ஆலோச னையில் ஈடுபட வேண்டு மென கோரிக்கை வலுத் துள்ளது.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(11.11.2026)

1. சென்னை காசிமேட்டில் முன்விரோதம் காரணமாக ரவுடி பட்டப்பகலில் வெட்டி படுகொலை.



2. சென்னை திருவொற்றியூர் அருகே வன்னியர் தெருவில் மது போதையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இளைஞர் சரமாரியாக வெட்டிக் கொலை.

3. திருச்சியில் உள்ள பெட்ரோல் பங்கில் பெண் ஊழியரை அசிங்கமாக திட்டி , கழுத்தை அறுத்து விடுவதாக கொலை மிரட்டல் விடுத்த வாலிபர்.



4. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த ஜெயங்கொண்டான் கிராமத்தில் கடைக்குச் சென்ற இரண்டாம் வகுப்பு படிக்கும் சிறுமி கடத்தல்.

5. நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் அருகே முன்விரோதம் காரணமாக ஏற்பட்ட தகராறில் நண்பரின் விரலை கடித்துத் துப்பிய வாலிபர்.

6. தர்மபுரி மாவட்டம் கொல்ல அல்லி பகுதியில் தனியார் மருத்துவமனை டாக்டர் வீட்டுப் பூட்டை உடைத்து 50 பவுன் நகை 23 லட்ச ரூபாய் பணம் கொள்ளை.



7. சென்னை தண்டையார்பேட்டையில் வட மாநிலத் தொழிலாளர்கள் தங்கி உள்ள விடுதிகளில் தொடரும் செல்போன்கள் திருட்டு.

8. திருவாரூர் பேருந்து நிலையத்தில் குடிபோதையில் இளைஞர்கள் ரகளை. போலீசார் உடன் தள்ளுமுள்ளு.




9. கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரம், அஞ்சுகிராமம் ஆகிய பகுதிகளில் வாகன சோதனையில் ஈடுபட்ட சப் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் போலீசாரை அறிவாளால் வெட்டிக் கொல்ல முயற்சி செய்த ரவுடிகள்.

10. கன்னியாகுமரி மாவட்டம் தென் தாமரைக் குளம் அருகே முகிலன் குடியிருப்புப் பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தி மாமூல் வாங்க முயன்ற ரவுடியை , பிடிக்கச் சென்ற சப் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட போலீசாரை வெட்ட முயன்ற ரவுடிகள்.

11. குமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் அருகே ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சப் இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட இரண்டு போலீசாரை அறிவாளால் வெட்ட முயன்ற ரவுடிகளால் பரபரப்பு.

12. வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே கழிஞ்சூரில் கடனுக்கு மது தர மறுத்ததால் டாஸ்மாக் கடை விற்பனையாளர் வீடு திரும்பும் போது வழி மறித்து சரமாரியாக தாக்குதல்.



13. சென்னையை அடுத்த வானகரம் அருகே வேலைக்குச் சென்று விட்டு திரும்பிய தனியார் நிறுவன ஊழியரை வழிமறித்து மதுபானம் வாங்க காசு கேட்டு கொடுக்க மறுத்ததால் அறிவாளால் வெட்டிய நபர் தப்பி ஓட்டம்.

14. சென்னை அபிராமபுரம் அருகே கே.வி. பி. கார்டனில் முன்விரோதம் காரணமாக ஆட்டோ ஸ்டாண்டில் அமர்ந்திருந்த ஆட்டோ டிரைவரை சரமாரியாக வெட்டி சாய்த்த கும்பல். ஆட்டோ டிரைவர் கவலைக்கிடம்.

15. கரூர் மேலப்பாளையம் பகுதியில் டாஸ்மாக் கடையில் மதுபானம் பெற தாமதமானதால் தகராறு. ஊழியர்கள் மீது தாக்குதல். பாதுகாப்பு இல்லாததால் 20 டாஸ்மாக் கடைகளை மூடி போராட்டம்.

16. தூத்துக்குடியில் த.வெ.க. மாவட்ட செயற்குழு பெண் உறுப்பினருக்கு ஆபாச குறுஞ்செய்தி. பாலியல் தொல்லை கொடுத்த த.வெ.க. நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி அமைச்சரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. த.வெ.க. பெண் கண்ணீர் பேட்டி.

17. அம்பத்தூர், பாடி உள்ளிட்ட பகுதிகளில் காலி மதுபாட்டில்களுக்கு ரூபாய் பத்து தர மறுத்து டாஸ்மாக் ஊழியர்கள் கடையை மூடி போராட்டம். ஸ்கேனர் பழுது மற்றும் சில்லறை இல்லை என்பதால் தகராறு ஏற்படுவதாக புகார்.